## சமூக ஊடகங்கள் தொடர்பில் HSBCயின் சமூக வழிகாட்டுதல்கள்

உங்கள் பெயர், முகவரி, பிறந்த திகதி, வங்கிக் கணக்கு இலக்கம், கடன் அட்டை இலக்கம் போன்ற தனிப்பட்ட தகவல் எதனையும் ஃபேஸ்புக், டுவிட்டர், மற்றும் ஏனைய சமூக ஊடகத் தளங்களில் பகிர்ந்துகொள்ள வேண்டாமென HSBC உங்களுக்குக் கண்டிப்பான முறையில் பரிந்துரை செய்கின்றது. அத்தகைய ஏதேனும் தகவலை நீங்கள் பகிர்ந்துகொண்டால் அதனால் ஏற்படக்கூடிய இடர்களுக்கு நீங்களே பொறுப்பேற்க நேரிடும். ஏதேனும் தனிப்பட்ட தரவுகளை சமூக ஊடகங்களில் இடுகை செய்யும்படி HSBC ஒருபோதும் உங்களைக் கேட்காது.

- பின்வரும் எதையேனும் ஊக்குவிக்கும், பரிந்துரைக்கும் அல்லது தூண்டும் விடயங்களை தயவுசெய்து இடுகை செய்ய வேண்டாம்: சூதாட்டம் அல்லது ஒன்லைன் கஸினோ, ஸ்போட்ஸ் புக்கீஸ், பிங்கோ அல்லது போக்கர் சீட்டாட்டம் தொடர்புடைய ஏதேனும் விடயம்.
- சுடுகலன்கள்/ஆயுதங்கள்/வெடிமருந்துகளின் பாவனை, ஏதேனும் சட்டவிரோத மருந்துகள், விபசாரம், ஆபாசப் படங்கள்.
- நிர்வாணம், தூஷணம் அல்லது வயது வந்தோருக்கு மட்டுமான விடயங்கள், வன்முறை அல்லது மதுபானம் மற்றும் புகையிலைப் பண்டங்களின் பாவனை.
- எவரேனுமொரு நபருக்கு, அரசாங்கத்திற்கு அல்லது நிறுவனத்திற்கு எதிராக ஆயுதமேந்துதல் அல்லது வேறு வழியில் ஏதேனும் அரசாங்கத்திற்குச் சவால் விடுத்தல் அல்லது அதனைக் கவிழ்ப்பதற்கு முனைதல்.

அல்லது வேறு வழியில் பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய இடுகைகளும் தவிர்க்கப்பட வேண்டும்:

- ஆபாசமான, அநாகரிகமான, அவதூறான, இழிவான, கேவலமான மற்றும்/அல்லது சட்ட விரோதமான விடயங்கள்.
- ஏதேனும் மூன்றாம் தரப்பின் ஆக்கியோன் உரிமை, வர்த்தகச் சின்னம், தனியுரிமை அல்லது வேறு தனிப்பட்ட அல்லது பிரத்தியேக உரிமைகள் உள்ளிட்ட உரிமைகளைச் சீரழிக்கும் அல்லது வேறு வழியில் மீறும் விடயங்கள்.
- வஞ்சகமான அல்லது மோசடியான விடயங்கள்.
- ஒரு நபருக்கு, குழுவினருக்கு அல்லது மற்றுமொரு வலைத்தளப் பாவனையாளர்களுக்கு எதிராக, அவர்களின் சாதி, வயது, பாலினம்,

இயலாமை, பாலியல் நோக்குநிலை, இனம், மதம், அரசியல் சார்புநிலை, பிறந்த நாடு, பிரஜாவுரிமை, பரம்பரை, விவாக நிலை, முதுமை, உள மற்றும் உடற் குறைபாடு அல்லது நிலையின் அடிப்படையில் வெறுக்கத்தக்க அல்லது பாரபட்சமான, இழிவான அல்லது கேவலமான கருத்துகளை வெளியிடுதல் அல்லது ஒரு பண்டம், சேவை, தொழிற்றுறை அல்லது நிறுவனத்தைப் பாதிக்கக்கூடிய முறையில் விரோதமான அல்லது குரோதமான உத்திகளைக் கையாளுதல்.

- இரகசியத் தன்மைக்கான ஏதேனும் கடப்பாட்டினை மீறுகின்ற இரகசியத் தகவல்கள்.
- ஏதேனும் வழியில் ஒரு கணினியின் செயற்பாட்டிற்குத் தீங்கு செய்யும் நோக்குடன் வடிவமைக்கப்பட்ட ஏதேனும் வைரசுகள், ஸ்பைவெயார், மல்வெயார் அல்லது வேறு தீங்கிழைக்கும் கூறுகள்.
- ஸ்பேம் (Spam) விளம்பரங்கள் அல்லது HSBC யுடன் தொடர்பில்லாத வழங்கல்கள், வங்கி வசதிகள். சேவைகள் மற்றும் வலைத்தளங்கள்.

திங்கள் முதல் வெள்ளி வரை பொது மற்றும் வங்கி விடுமுறைகள் தவிர்ந்த வேலை நாட்களில் மு.ப. 9.00 க்கும் பி.ப. 5.00 க்கும் இடையே HSBC ஸ்ரீலங்கா ஃபேஸ்புக் பக்கத்தை நாம் இற்றைப்படுத்திக் கண்காணிக்கின்றோம்.

நீங்கள் எமது உள்ளடக்கத்தை பகிர்ந்துகொண்டு like/follow us செய்தால் எமக்கு மகிழ்ச்சி. புதிய followers மற்றும் பக்கங்களை நாம் தன்னியக்கமாக like/follow back செய்வதில்லை. நாம் உங்களை follow செய்யாவிட்டால், HSBCயிடமிருந்து ஏதேனும் வகையான ஒப்புதல் கிடைத்துள்ளதென்பது அதன் அர்த்தமாகாது.

HSBCக்கு அல்லது HSBCஐ பற்றி மக்கள் சமூக ஊடகத் தளங்களில் என்ன சொல்கிறார்கள் என்பதைத் தீவிரமாக அவதானித்துவரும் நாம், உங்கள் கருத்துகளுக்கு மதிப்பளிக்கின்றோம். எனினும், சமூக ஊடகத் தளங்கள் பகிரங்கமானவை என்பதால், எல்லா விடயங்களிலும் பதில் நடவடிக்கை எடுக்கவோ அல்லது ஈடுபடவோ எம்மால் முடியாது.

HSBCயின் சமூக ஊடகப் பிரசன்னங்கள், ஃபேஸ்புக் அல்லது டுவிட்டரிலான நேரடிச் செய்திகள் ஊடாக தனிப்பட்ட கணக்கு விபரங்களை கலந்துரையாட இடமளிக்காது. அத்தகைய தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் தேவையுள்ள ஏதேனும் விசாரணை உங்களிடம் இருப்பின், பட்டியலிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களில் ஒன்றினூடாக எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்